**அரச சேவை ஆணைக்குழு**

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி விஷேட தர மாவட்ட அத்தியட்சகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2020(2023)**

# Limited Competitive Examination for Recruitment to the Post of District Inspector (Transportation & Commercial) Supra Grade in Management Assistant Service of Sri Lanka Railway Department 2020(2023)

அரச சேவை ஆணைக்குழுவினால் 2018.10.19 ஆம் திகதி அனுமதியளிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி விஷேட தர மாவட்ட அத்தியட்சகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் ................................. ஆகும்.

01) இப் பரீட்சையின் மூலம் மேற் கொள்ளப்படுவது இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி விஷேட தர மாவட்ட அத்தியட்சகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பாகும்.

2) ஆட்சேர்ப்பதற்கான தகுதி

2.1 (a) நிலைய அத்தியட்சகராக அல்லது புகையிரத பாதுகாவளர் சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானது மான சேவை காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

அல்லது,

b) நிலைய அத்தியட்சகர் சேவையில் தரம் 1 நிலைய அத்தியட்சகராக அல்லது புகையிரத பாதுகாவளர் சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானது மான சேவை காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

2.2 உடற்தகுதி

(1) சிறந்த ஒழுக்க நடத்தையுடனும் நாட்டின் எப்பகுதியிலும். சேவையாற்று வதற்கான தேக ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

2.3 வேறு தகுதிகள்

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(ii) நன் நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) பதவி உயர்வு கிடைக்கும் திகதியன்று பூரணமான 05 வருடத்திற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தினை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.
(iv) ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான மேற்கூறப்பட்ட அனைத்து தகுதிகளும் விண்ணப்பத்தில்/ வர்ததமானி பத்திரிக்கையில் காணப்படும் தினத்திற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

3) நியமிக்கப் படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 22 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும்.

4) சேவை நிபந்தனைகள்

4.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும் , அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் 2018.10.09 ஆந் திகதி PSC/EST/04-01-43/06/2016 ஆம் இலக்க அனுமதியின் கீழ் இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவை பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதன் அடுத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/ 30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் உதவி விஷேட தர மாவட்ட அத்தியட்சகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) நியமிக்கப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 அப் பதவி ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும்.

4.4 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப் பேற்கத் தவறுகின்ற மற்றும் / அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5) மாதாந்த சம்பள அளவுத்திட்டம் -
03/2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உபஅட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 41,580 - 11 x 755- 18 x1,030 = ரூபா 68,425/- (MN - 7-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

6) பரீட்சைக் கட்டணம் -
பரீட்சைக் கட்டணம் ரூ.1500/– ஆகும். விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளர் கணக்கு இல 306-2-1-0-1409-00-001 இற்கு திணைக்கள ஆதாயத்திற்கு வரவாகுமாறு நாடெங்கும் உள்ள எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்திற்கு பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கூட்டினுள் கழறாதவாறு ஒட்டி விடவும். பரீட்சைக்க் கட்டணமாக ரசீது அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டினை பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று.

(i) பரீட்சைக்கு செலுத்தப்படும் பணம் எச்சந்தர்பத்திலும் திருப்பித்தரபடமாட்டாது
(ii) பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

7) விண்ணப்பிக்கும் முறை -

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டுமென்பதுடன் அது ஏ4 (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாவிக்க முடியும். 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம்

தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் கனணி அல்லத தட்டச்சின் மூலம் தயாரிக்கப்பட்டவையாகவும் இருக்கலாம் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தங்கள் கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படல் வேண்டுவதோடு மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உட்செலுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதனையும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழராத வாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பதனையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பபடிவத்தின் நிழற் பிரதியுடன் தாம் சேவையாற்றும் திணைக்கள தலைவரிடம் கையளிக்க வேண்டும். பிழையின்றி பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவங்கள் உப திணைக்கள தலைவரினூடாக பரிந்துரைக்கப்பட்டு நிழற் பிரதி தனி நபர் கோவையிலும் முதற் பிரதி பகையிரத பொதுமுகாமையாளர் காரியாலயத்திற்கு ……………………….ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

உப திணைக்கள தலைவரினூடாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை தவிர தனிப்பட்ட முறையில் முன் வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறித்த திகதியில் கிடைக்கப்பெறாத அனைத்து விண்ணப்படிவங்களும் நிராகரிக்கப்படும் உப திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்படிவம் அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதுடன் மாதிரி விண்ணப்பப்படிவ இல.07 குறிப்பிட்ட திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தி கையொப்பமிடப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் புகையிரத பொதுமுகாமையாளர் அல்லது புகையிர திணைக்களத்தில் நேவையாற்றும் பிற உத்தியோக்கர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைக்கபடல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் மாவட்ட அத்தியட்சகர் (போக்குவரத்து /வர்த்தகம்) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2020(2023)” என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஈ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை புகையிரத பொதுமுகாமையாளர் காரியாலயத்தின் நியமனக்கிளையில் இருந்து கெபினட் கிளைக்கு அறிவிக்கப்படும். அத்தினத்திலிருந்து ஓரிரு நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு கிடைக்கப்பெறா விடின் அவ்விளம்பரத்தில் அறிவிக்கப்படுள்ளவாறு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) 0115 980236 என்ற இலக்கத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும். நிறுவனத்திற்குத் தெரிவிக்கும் போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பை தவிர்ந்த விண்ணப்பதாரியாயின் தகவல்களை பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தை குறித்து கடிதத்துடன் பெக்ஸ் மூலமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாகும். மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை எனக்கொள்ள உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை தயார்நிலையில் வைத்திருப்பது சிறந்தது.

8) **பரீட்சைக்கு அனுமதித்தல் –**

(அ) கெசட விளம்பரத்தில் உள்ளவாறு தகுதியுடையவர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார் என்பதை கொண்டும் விளம்பரத்தில் கூறிய வாறு வயதெல்லையினை உடைய, விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று மற்றும் அத்தினத்திற்கு முன் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூரணப்படுத்தி அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப் பத்திரம், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முன் கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரங்களைப் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக் கோவை ஒன்று இவ் வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப் படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்திலும் அனுமதிப்பத்திரத்தலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**குறிப்பு.-** விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதற்காகும் மற்றும் அவர் பதவிக்கு தகுதியானவர் என்பதாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

9) விண்ணப்பதாரியின் ஆளடையாளம் -

விண்ணப்பதாரிகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிருபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஆளடையாள ஆவணங்களில ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை சாரதி அடையாள அட்டை

இவ்வாறான பரீட்சாத்திரிகள் ஆளடையாலத்தை நிரூபிக்கும் வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மூடப்பாடாதவாறு பரீட்சை நிலைத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு அன்றி பிரவேசிக்கும் பரீட்சாத்திரியை பரீட்சை நிலையத்திற்குள் அனுமதிக்க இயலாது. பரீட்சை ஆரம்பத்திலிருந்து முடியும் வரை பரீட்சாத்திரிகள் ஆளடையாலத்தை நிரூபிக்கும் வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மூடப்பாடாதவாறு பரீட்சை எழுதல் வேண்டும். அவ்வாறு இருக்க முடியாது என மறுத்தால் பரீட்சை எழுதப்படுவது தடை செய்யப்படாது. இருப்பினும் அவரது பெறுபேறு வெளியிடப்பட மாட்டாது.

10) பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை –

(i) விண்ணப்பத்தினை பூர்ணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை பெற்றுத்தர வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைக்கமைய யாதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தகுதியற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ii) உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் காணப்படும் அனைத் விடயங்களும் பொய்யானது அல்லது தவறானது என நியமனம் பெறுவதற்கு முன்னர் உறுதிப்படுத்தப்படின் உங்கள் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும். அனைத்து விடயங்களும் பொய்யானது அல்லது தவறானது என நியமனம் பெறுவதற்கு பின்னர் உறுதிப்படுத்தப்படின் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீங்கள் சேவையில் இருந்து விலக்கப்படுவீர்கள்.

11) பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம் -

11.1 பரீட்சை மொழி

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

குறிப்பு : (1) விண்ணப்பதாரி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத் தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

2) விண்ணப்பப் படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரி அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

11.2 பரீட்சை பெறுபேறுகள்

I இப்பரீட்சை பெருபேறுகள் அரச சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் செய்யும் பொருட்டு இலங்கை புகையிரத திணைக்களத்தினால் மற்றைய பரீட்சாத்திர்களின் புள்ளிகள் வெளியிடப்படுவதை அறிவிப்பதன் பின்னர் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் புள்ளி விபரங்கள் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கப்படுவதுடன் அதற்கான பொறுப்பை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்படும்.

II பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பான அனைத்து தீர்மானங்களம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும்.

11.3 பரீட்சை பாடத்திட்டம்

11.3.1 எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்

(1) <u>நுண்ணறிவுப் பரீட்சை</u>

விண்ணப்பதாரி எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள்,இடைத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம்: 01 மணித்தியாலங்கள்)

(2) <u>புரிதல்</u>

விண்ணப்பதாரியின் எண்ணங்களின் மூலம் வினாக்களுக்கு விடையளிக்கும் ஆற்றல், இலக்கணப்பிழையின்றி வாக்கியம் அமைக்கும் திறன், புரிதல் தொடர்பான வினாக்களுக்கான பந்தின் அடிப்படையான வினாக்களுக்கு முழுமையான முறையில் விடையளித்தல். (காலம்: 02 மணித்தியாலங்கள்)

12) ஆட்சேர்ப்புமுறை

எழுத்துப் போட்டி தேர்வில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களின் தகுதியின் வரிசைப்படி, இரண்டு மடங்கு வெற்றிடங்களுக்கு சமமான எண்கள் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு பரிந்துரைக்கப்படுவர். மற்றும் விண்ணப்பதாரிகளை அழைக்கும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண் எழுத்துப்பரீட்சையில் மட்டும் திறன் மதிப்பீட்டு நேர்காணலில் மதிப்பெண்களின் கூட்டுத் தொகையின அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள்.

12.1 எழுத்துமூலப் பரீட்சை –

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சைத் தாள்கள் இரண்டினை (02) உள்ளடக்கியிருக்கும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்த பட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :

| பாடம் | காலம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. புரிதல் | 01 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சாத்திரிகள் அனைத்து பரீட்சையிலும் சமூகமளிக்க வேண்டும்.

12.2 பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை –

இவ் அறிவித்தலில் 13.1 பந்தியின் அடிப்படையில் எழுத்துப் பரீட்சையில் பங்குபற்றி சித்திபெற்ற விண்ணப்பதாரிகளில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் இருக்குகின்ற வெற்றிடங்களுக்கு சமனாக இரட்டிப்பு எண்ணிக்கயிலான விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்புவிடுக்கப்படுவர். எழுத்து மற்றும் நேர்முகப்பரீட்சையில் முழுப்புள்ளிகளின் கூட்டுத்தொகை கொண்டு திறமைகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் வெற்றிடங்களுக்கு சமனான விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

அரசாங்க சேவை ஆனைக்குழு அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் மற்றும் சிரேஷ்ட தகைமைகளை பார்ப்பதற்கும் கீழ்வரும் அட்டவணையின் அடிப்படையில் நியாயமான முறையில் நேர்முகப்பரீட்சை இடம்பெறப்படும். அதில் பெறப்படும் அதிகூடிய புள்ளிகள் 100 ஆகும்.

12.3 புள்ளிகள் வழங்கப்படும் விபர அட்டவணை

| இல | **புள்ளிகள் வழங்கப்படும் முறை** | **பார்க்கப்படும் விடயங்கள்** | **கொடுக்கப் படும் புள்ளிகள்** | **அதிக்கூடிய புள்ளிகள்** |
|---|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமைகள் | ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட படிப்பு | 20 புள்ளிகள் | 20 |
| 2. | தொழிற் தகைமைகள் | ஏற்றுக்ொகள்ளப்பட்ட நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழ் 06 மாதத்திற்கு மேலான தொடர்பாக | 10 புள்ளிகள | 20 |
| | | ஏற்றுக்ொகள்ளப்பட்ட நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழ் 06 மாதத்திற்கு குறைவான தொடர்பாக | 10 புள்ளிகள் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | அனுபவ அறிவு | புகையிரத அத்தியட்சகர் சேவை | மூன்று வலயங்களுக்கு புகையிரத அத்தியட்சகர் 111, 11 மற்றும் 1 றின் இயக்கும் புகையிரத அத்தியட்சகராக சேவையில் ஈடுபட்டிருத்தல் | 06 புள்ளிகள் | 30 |
| | | | புகையிரத அத்தியட்சகர் தரம் 1 றின் 05 வருடகாலம் சேவையில் ஈடுபட்டிருத்தலில் மகிழ்ச்சிகரமான ஒவ்வொரு சேவை காலத்திற்கு 02 புள்ளிகளின் படி | 12 புள்ளிகள் | |
| | | | புகையிரத அத்தியட்சகராக விஷேட தரத்தில் மகிழ்ச்சிகரமான சேவை காலத்தினை கொண்டிருத்தல் வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் | 12 புள்ளிகள் | |
| | | புகையிரத பாதுகாவளர் | மூன்று வலயங்களுக்கு புகையிரத பாதுகாவளர் 111, 11 மற்றும் 1 றின் இயக்கும் புகையிரத பாதுகாவளராக சேவையில் ஈடுபட்டிருத்தல் | 06 புள்ளிகள் | |
| | | | புகையிரத பாதுகாவளர் தரம் 1 ல் 05 வருடகாலம் சேவையில் ஈடுபட்டிருத்தலில் மகிழ்ச்சிகரமான ஒவ்வொரு சேவை காலத்திற்கு 02 புள்ளிகளின் படி | 12 புள்ளிகள் | |
| | | | புகையிரத பாதுகாவளராக விஷேட தரத்தில் மகிழ்ச்சிகரமான சேவை காலத்தினை கொண்டிருத்தல் வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் | 12 புள்ளிகள் | |
| 4. | ஆங்கில மொழி ஆற்றல் | ஏற்றுக்ரொகள்ளப்பட்ட நிறுவனத்தின் டிப்ளோமா படிப்ப 06 மாதத்திற்கு மேலான தொடர்பாக | | 10 புள்ளிகள் | 15 |
| | | ஏற்றுக்ரொகள்ளப்பட்ட நிறுவனத்தின் சான்றிதழ் படிப்பு 03 - 06 மாதத்திற்குட்பட்டது தொடர்பாக | | 05 புள்ளிகள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | கணினி அறிவு | ஏற்றுக்ரொகள்ளப்பட்ட நிறுவனத்தின் டிப்ளோமா படிப்பு 06 மாதத்திற்கு மேலான தொடர்பாக | 06 புள்ளிகள் | 10 |
| | | ஏற்றுக்ரொகள்ளப்பட்ட நிறுவனத்தின் சான்றிதழ படிப்பு 03 - 06 மாதத்திற்குட்பட்டது தொடர்பாக | 04 புள்ளிகள் | |
| | க.வே. - இல 04 மற்றும் 05 டிப்ளோமாக்கள் 06 மாதத்திற்கக் குறையாததாகவும் அல்லது 720 மணித்தியாலங்களுக்கு குறையாததாகவும் டிப்ளோமாவாக இருத்தல் வேண்டும். மேலும் சான்றிதழ் படிப்பு 03 மாதத்திற்கக் குறையாததாகவும் அல்லது 360 மணித்தியாலங்களுக்கு குறையாததாகவும் இருத்தல் வேண்டும் | | | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன் | ஒழுக்கசீலதரக இருத்தல் | 02 புள்ளிகள் | 05 |
| | | முகங் பொடுக்கும் ஆற்றல் (வினாக்களுக்கு விடையளிக்கும் திறன்) | 02 புள்ளிகள் | |
| | | நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் விதம் | 01 புள்ளிகள் | |

12.4 இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் பொது சேவை ஆணைக் குழுவிற்கு இரண்டு மடங்கு வெற்றிடங்களின் எண்ணிக்கையை ( தேர்வு எண் / அகரவரிசைப்படி) விண்ணப்பதாரர்களின் பெயர் அடங்கிய முன்னுரிமை பட்டியல் வழங்கப்படும்.

13) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இப்பிரசுரத்தில் மொழிகளுக்கிடையில் வேறுபாடு இருப்பின் அல்லது மூன்றிற்கும் இடையில் தொடர்பில்லா தன்மை காணப்படின் சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் கெசட் விளம்பரத்தை அடிப்படையாகக கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

14) வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆட்சேர்ப்புக்குமான அனைத்த அதிகாரங்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினை சாரும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே
செயலாளர்
(போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு)
07 வது மாடி, செத்சிரிபாய,
11 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.
…………………………….ஆம் திகதி,

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி விஷேட தர மாவட்ட அத்தியட்சகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்) இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2020(2023)**

**Limited Competitive Examination for Recruitment to the Post of District Inspector (Transportation & Commercial) Supra Grade in Management Assistant Service of Sri Lanka Railway Department 2020(2023)**

பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - **2**
தமிழ் - **3**
ஆங்கிலம் - **4**

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):…………………………………
(உதாரணம்:**HERATHMUDIYANSELAGESAMANKUMARA GUNAWARDHANA)**

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்):(உதாரணம் : **GUNAWARDHANA, H. M. S. K.)** : ………………….

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்): ………………………………………..

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) : ……………………………………………

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ………………………………

2.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ………………………………

2.7 பால் - ஆண் - 0 (உரிய இலக்கத்தைக்
பெண் - 1 கூட்டினுள் இடவும்)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.9 தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.10 விவாக நிலை :(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

விவாகமாகாதவர் - 1

விவாகமானவர் - 2

2.11 இனம் : (சிங்களம் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம்- 4, ஏனையோர் - 5) (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.12 பிறந்த திகதி

ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

3.0 ……………….. ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/ தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/ நேர்முகப் பரீட்சையினைத் தாங்கள் சித்தியெய்திய மொழி ஊடகத்தினைக் குறிப்பிடவும் : ……………………………

4.0 **(i)** வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா ? : ………………

(அ) ………………. ஆந் திகதியிலுள்ளவாறு வயது : ………………

வருடங்கள்…………..மாதங்கள்……………. நாட்கள்…………

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் : ………………………

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5(ஆ)இற்கமைய பந்தி 05(ஆ)(i)/ (ஆ)(ii) இன்கீழ் பரீட்சார்த்தி தகைமை பெற்றுள்ளாரா?

(i) என்பதைக் குறிப்பிடவும் : ……………………………………

(ii) தற்போது வகிக்கும் பதவி : ………………………………

(iii) தரம் : ……………………………………………………

(iv) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: …………………………

(v) அப்பதவியில் நிரந்தரமான திகதி : ………………………

(vi) சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் : ………

(vii) பரீட்சைக்கு தோற்றி மொழி : ……………………………

**(ii)** வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள் / தரங்களின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய ……………………… ஆந் திகதியில் உள்ளவாறான முனைப்பானதும் திருப்திகர மானதுமான மொத்தச் சேவைக்காலம் : ………………………………………

5.0 பரீட்சை கட்டணத்தை செலுத்துதல்:

பரீட்சை கட்டணம்

i. செலுத்தும் இடம்……………………….

ii. செலுத்தப்பட்ட பணம் …………………

iii. பற்றுச்சீட்டு இல ……………………….

iv. செலுத்தப்பட்ட திகதி …………………..

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச் சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

6.0 பரீட்சார்த்தியின் சான்றுரை :

………………………. ஆந் திகதிக்கு முன்வரும் மற்றும் வயது காலப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05 (ஆ) இற்கமைய …………………… ஆந் திகதியல் உள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகர மானதுமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் அமைய இம் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குத் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், இப் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறு பேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

திகதி …………………..                                        ……………………………….

பரீட்சார்த்தியின் கையொப்பம்.

07. திணைக்களத் தலைவரின் சான்றுரை (தனிப்பட்ட கோவையினைச் சரிபார்த்து) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ………………… ……………………….. என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும், …………………… ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப் படவில்லை என்றும் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 06 (ஆ) இற்கமைய ............................ (ஐந்து) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்ப படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும், குறிப்பிடப்பட்ட பரீட்சைகட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

……………………………………..

திணைக்களத் தலைவரின்/ அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் : ……………………………....
பதவி : ……………………………….
திகதி : ………………………………..

(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)